அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.5/93

எனதுஇல.111/163/8/28/எல்/எல்/11
அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
1993,பெப்ரவரி மாதம் 25ஆந் திகதி.

செயலாளர்கள்,

திணைக்களத் தலைவர்கள்,

கூட்டுத்தாபனங்கள்

நியதிச் சபைகளின் தலைவர்கள் யாவருக்கும்.

ரம்ழான் பண்டிகைக் காலத்தில் விசேட விடுமுறை
வழங்குதல்

1992 மார்சு மாதம் 11ஆம் திகதிய 14/92 இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கு தங்களின் கவனம் கோரப்படுகிறது.

02. 1993ஆம் ஆண்டின் ரம்ழான்/ராமசான் விழாக்காலத்தில் முஸ்லீம் அரச அலுவலர்க பணியாளர்கும் தொழுகையிலும் பிற மத வழிபாடுகளிலும் கலந்து கொள்வதற்கு ஒழுங்குக செய்யுமாறு நீங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

03. தொழுகைகள் நாளாந்தம் பின்வரும் நேர அட்டவணைப்படி நிகழும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு.ப. | 3.00 | முதல் | மு.ப. | 5.30. | வரை |
| மு.ப, | 6.00 | முதல் | மு.ப. | 7.00 | வரை |
| பி.ப | 6.00 | முதல் | பி.ப | 7.00 | வரை |
| பி.ப. | 8.00 | முதல் | இரவு. | 10.00 | வரை |

04. இக் காலங்களின் போது சமய வழிபாடுகளில் கலந்து கொள்ளக் கூடியதாக வே நேரங்களை ஒழுங்கு செய்து கொடுத்தல் வேண்டும். அவசியப்படும் சந்தர்ப்பங்களில் வி லீவு அங்கீகரிக்கப்படலாம்.

05. மேலும் 1993 ரம்ழான் (ராமசான்) பெருநாளின் இறுதித்திகதிக்கு 14 நாட்கரு முன்னதாக அரச சேவை கூட்டுத்தாபனங்கள் சட்டவாக்கச் சபைகள் ஆகியவற்றில் கட்மை தகைமையுடைய அலுவலர்கள்/பணியாளர்கட்கு விழா முற்பணம் வழங்கத் தயைபுரிந்து நடவடி எடுக்கவும்.

ஒப்பம்:(எம்.என்.ஜுனைட்)
செயலாளர்
அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.